பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 26 வெள்ளிக்கிழமை 11.08.2023 கதிர் 273

# 13ஐ அமுல்படுத்தினால் நாடு பிளவுபடுவது உறுதி

## பேராசிரியர் இந்துராஹாரே தம்மரத்ன தேரர் எச்சரிக்கை

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுலாக்கினால் நாடு இரண்டாகப் பிளவுபடுவது உறுதி என போராசிரியர் இந்துராஹாரே தம்மரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்தார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குஎதிராகஅனைவரும் அணிதிரள வேண்டுமென்று ஓமாரே கஸ்ஸ தேரர் வலியுறுத்தியுள்ளார்.

'13ஆவது திருத்தச்சட்டத்தினை வழங்கினால் என்ன நடக்கும்: மக்களுக்கு தெளிவூட்டல்' எனும் தொனிப்பொருளில் கொழும்பு பௌத்தமாநாட்டுமண்டபத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் இந்தக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. பௌத்த பீடங்கள், தேசிய சங்க அமைப்புக்கள், படையினர் அமைப்புக்கள், புத்திஜீவிகள் குழுவினர் ஆகியவை கூட்டிணைந்து இந்தக்கூட்டத்தைஏற்பாடுசெய்திருந்தன.

இதில் பிரதான கருத்துரையாளராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே போராசிரியர் இந்துராஹாரே ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தைத் தட்டியெழுப்பும் முயற்சிகள் தெற்கில் தொடங்கப்பட்டுவிட்டன. இது தொடர்பில் நேற்று ஒரு கூட்டம் நடந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் பச்சைப் பொய்கள் எல்லாம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அதில் மிகப் பெரிய பொய், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்பது. அவர்கள் அப்படிச் சொல்வது வடக்கு கிழக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து பிரிந்துவிடும் என்கிற அர்த்தத்தில்தான். ஆனால், 13இன்படி இந்த நாடு 9 நாடுகளாகப் பிளவுறும். அப்படி நடப்பதற்கு எதாவது ஒரு சாத்தியம், வாய்ப்பு இருக்கிறதா என்பதை மூளையுள்ள ஒவ்வொருவருமே புரிந்துகொள்வது சிரமமானதல்ல என்றாலும் அப்பாவிச் சிங்களவர்களின் சிந்தனையில் விசத்தை விதைக்க இவ்வாறு கட்டுக் கதைகளைப் புனையத் தொடங்கியிருக்கிறார்கள்.

பௌத்த பீடங்கள், தேசிய சங்க அமைப்புக்கள், படையினர் அமைப்புக்கள், புத்திஜீவிகள் குழுவினர் ஆகியவை கூட்டிணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றன என்று கூறப்பட்டாலும் இதனை உண்மையில் ஏற்பாடு செய்தவர் இலங்கைத் தரைப்படையின் முன்னாள் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ். இறுதிப் போர் நடந்த காலப் பகுதியில் 56 மற்றும் 57 ஆகிய தரைப் படையணிகளின் கட்டளைத் தளபதியாக இருந்தவர் அவர். இந்தப் போரில் பல போர்க் குற்றச்சாட்டுக்களுக்கும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கும் உள்ளாகியவை இந்தப் படையணிகள். அதன் கட்டளைத் தளபதியாக இருந்தவர் என்கிற அடிப்படையில் அவர் அமெரிக்காவிற்கு நுழைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நபர்களில் இவரும் ஒருவர் என்பதாலேயே அமெரிக்க அரசு இந்தத் தடையை அவருக்கு எதிராகப் பிறப்பித் ☞ 2

### தவறுகளின் அழிவுகளை கவனத்தில் வைத்திருங்கள்

## அழித்தொழிக்க நினைத்தீர்களானால் தமிழர்கள் இறுதிவரை போராடுவர்

### சிங்கள அரசியல்வாதிகளுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் கடும் எச்சரிக்கை

தமிழ்மக்களைஅழித்தொழித்துவிடலாம் என்ற உங்களது நீண்டகால நடவடிக்கைகளில்எவ்வளவுஅழிவைச் சந்தித்திருக்கிறீர்கள்என்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். உங்களது தூரப்பார்வையற்ற, தேசப்பற்றற்ற கொள்கைகளும் நடவடிக்கைகளும் முழு இலங்கையையும் மிக மோசமான மீளமுடியாத பொருளாதாரசீர்குலைவிற்குள் கொண்டுசென்றுள்ளதை கவனத்தில் கொள்ளுங்கள். நீங்கள் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்தும் முன்னெடுப்பீர்கள் என்றால் போராட்டகுணம் கொண்ட தமிழ் மக்கள் இறுதிவரை போராடுவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த நாட்டில் ஒரு ☞ 2

## மாகாணப் பொலிஸ் அதிகாரம் பற்றி அமைச்சர் டலஸ் – கூட்டமைப்பு பேச்சு

### காரணங்களை விளக்கினர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

அமைச்சுஅலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் அதிகாரங்களைத் தமிழர்கள் கோருவதற்கான காரணங்களைக் கேட்டறிந்தார்.

உலக நாடுகளை முன்னுதாரணமாகக் ☞ 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 40 கைதிகள் மாத்திரமே சிறைகளில்

### இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தகவல்



அரசு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அதிகமானவர்களைச் சிறையில் அடைத்து வருகின்றது எனச் சிலர் கூறினாலும் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் சுமார் 40 பேரே இருக்கின்றனர் என்று நீதிமன்ற, சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார். ☞ 2

## பயன்பாடற்ற கட்டடத் தொகுதியின் பராமரிப்புக்கு ரூ. 60 லட்சம் செலவு

### வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திலேயே இந்த நிலை

(ந.லோகதயாளன்.)

வவுனியாவில் இயங்காத பொருளாதார மத்திய நிலையத்திற்கு 5 ஆண்டுகளாக பாதுகாப்புக் கட்டணம் மற்றும் சுத்திகரிப்புக் கட்டணமாக 58 லட்சத்து 65 ஆயிரத்து 128 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் நீண்ட சர்ச்சைக்கு மத்தியில் 2018ஆம்ஆண்டுஅமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இன்றுவரை பாவனையின்றி உள்ளது. பயன்பாடற்ற இந்தக் கட்டடத்தைஅமைக்க29கோடியே 16லட்சத்து 39 ஆயிரத்து 356 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

எதற்காக அமைக்கப்பட்டதோஅந்தநோக்கத்திற்காக இந்தக்கட்டடம்இதுவரையில் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் கொரோனா காலத்தில் நோயாளர்கள் தனிமைப்படுத்தல் நிலையமாக இது பயன்படுத்தப்பட்டது.

அண்மையில்இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையிலான குழுவினர் இந்தக் கட்டடத்தைப் பயன்பாட்டுக்குக்கொண்டுவருவது தொடர்பில் ஆராய்ந்தனர் எனினும் அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அந்தக் கட்டடத் தொகுதியின்பாதுகாப்புமற்றும் சுத்திகரிப்புக்காக 2018 முதல் 2022 ☞ 2

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ஓக. 21 மீளத் தொடக்கம்



(ந.லோகதயாளன்.)

முல்லைத்தீவுமாவட்டம், கொக்குத்தொடுவாயில்உள்ள மனிதப்புதைகுழியில்ஓகஸ்ட் 21 முதல் மீண்டும் அகழ்வுப் பணிகளைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதைகுழிப் பகுதிக்கு நேற்றுச் சென்ற நீதிபதி மற்றும் வல்லுநர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட பின்னர் இந்த முடிவு ☞ 2

### மலையகத் தமிழருக்குத் தேவை நியாயமே

## இந்தியாவைப் பின்பற்றி பிரிட்டனும் எமக்கு உதவ வேண்டும் என்று மனோ கோரிக்கை

'மலையகத்தமிழ்மக்கள் இன்றுவேண்டுவதுஎவரதும் அனுதாபங்கள் அல்ல. எமக்குத் தேவை நியாயம். இன்றைய இந்திய அரசு இதை உணர்ந்துள்ளது. இந்தியாவைப் பின்பற்றி பிரிட்டனும் எமக்கு உதவ வேண்டும்' - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் முழுநாள் மலையகப் பெருந்தோட்ட மக்கள் தொடர்பான பிரேரணையை நேற்று (10) சமர்ப்பித்து ஆரம்ப உரைநிகழ்த்தியபோதேஅவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞ 10

## மாணவரின் ஆர்ப்பாட்டம் மீது கொழும்பில் நீர்த்தாரை வீச்சு

### கிருலப்பனையில் பதற்றம்

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பு - கிருலப்பனையில் நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் நீர்த்தாரை வீச்சைப் பயன்படுத்தினர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

முன்னதாக, இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்ஒருங்கிணைப்பாளர் மதுசான் சந்ரஜித் உள்ளிட்ட 10 பேருக்குக் கொழும்புகோட்டைபிரதேசத்தின் பல இடங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

பொலிஸாரால்முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கொழும்புகோட்டைரயில் நிலையத்துக்கு முன்பாக அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன்னெடுக்கப்பட இருந்த போராட்டத்தால் பொதுமக்களுக்கு ☞ 2

## நாடாளுமன்றில் ஒலித்தது பாடகி அசானியின் பெயர்



'இந்திய Zee Tamil (ஜி தமிழ்) தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சரிகமப நிகழ்வில் புசல்லாவை, நயாபன தோட்ட சிறுமியான அசானி பங்கேற்றுள்ளார். மலையக மக்களைக் கௌரவப்படுத்தும்வகையில் அவர் பாட்டுப் போட்டியில் பங்கேற்றுள்ளார்.'

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை ☞ 2

## வடமத்தியை சேர்ந்தோருக்கு வடக்கில் அரச நியமனங்கள்

(ந.லோகதயாளன்)

வடக்கில்உள்ளகடற்றொழில் நீரியல் வளத்துறை அலுவலகங்கள்உள்ளசிற்றூழியர்கள் வெற்றிடத்திற்கு வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்தசிங்களவர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் உள்ள 4 கடற்றொழில் மாவட்டங்களில் இரு மாவட்ட கடற்றொழில் நீரயல்வளத் துறை உதவிப் பணிப்பாளர் காரியாலயங்களில் காணப்பட்ட சிற்றூழியர்கள்வெற்றிடத்திறகேகடந்த திங்கள் திழமை 7 ஆம் திகதி முதல்கடற்றொழில்அமைச்சினால் இந்தச் சிற்றூழியர்கள் நியமக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அலுவலகங்களிற்குஇவர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். மதவாச்சி, அநுராதபுரம் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் இவ்வாறு சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கடற்றொழில் அமைச்சராக மூத்த தமிழ் அமைச்சர் ஒருவர் இருக்கும் நிலையிலும்அவரதுஅமைச்சினால் இந்த நியமனங்கள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இனி இது .....

தது.

ராஜபக்ஷக்களுக்கு குறிப்பாக கோட்டாபயவுக்கு மிக நெருக்கமானவரான இவர் போரின் பின்னர் ஜெர்மனிக்கான இலங்கை பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்டார். அவர்தான் இந்த நிகழ்வைப் பின்னணியில் இருந்து நடத்தியவர். இத்தகைய ஒரு நிழ்வை நடத்தப் போகிறார் என்று அவர் முன்கூட்டியே தெரிவித்துமிருந்தார். அத்தோடு, இந்தக்கூட்டத்தின் பின்னணியில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் சேர்ந்திருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது. அதாவது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கான வியத்கம என்ற அமைப்பினைச் சேர்ந்தவர்கள்.

ஆக மொத்தத்தில் 13ஐ நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றவர்களின் பின்னணியில் யாரது கைகள் உறுதியாகத் தெரிகின்றன என்பது வாசகர்களாகிய உங்களுக்குப் புரியாமல்இருக்காது. நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்டாலும்ஒரேவருடத்தில்மீண்டும் நாட்டைக் குழப்பும் தமது வல்லமையை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள். பழைய குருடி கதவைத் திறவடி என்கிற கதையாக மீண்டும் மீண்டும் ஒரே கதையே இங்கே அரங்கேறுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 13ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13ஆல் நாடு பிளவுபடும் என்றார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உரிமைகள் தொடர்பில் மாறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன. ஆகவே அந்த விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டும். குறைந்த உரிமைகள் தொடர்பிலான பகுதிகள் காணப்படமுடியும். அவற்றை நீக்க வேண்டும்.

அதற்காக, 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்குதல் என்பதுமிகவும் ஆபத்தானது. அச்செயற்பாடானது நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு வழிசமைக்கும் விடயம் என்பது மிகவும் தெளிவானது.

ஆகவே அவ்விதமான செயற்பாட்டுக்கு இடமளிக்க முடியாது. அதனை எதிர்த்துப் போராட வேண்டியது அவசியமாகின்றது - என்றார்.

கூட்டத்தில் ஓமாரே கஸ்ஸ தேரர் தனது உரையில் தெரிவித்ததாவது:

1987ஆம் ஆண்டு ஜோர்.ஆர்.ஜெயவர்த்தவுடன் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி ஒப்பந்தம் செய்தபோது எதிர்ப்பு வெளியிட்ட அரசியல் கட்சிகள் தற்போது மௌனம் காண்பிக்கின்றன.

குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பிரதமர் பிரதிநிதித்துவப்படுத்தும் மகாஜன எக்சத் பெரமுன ஆகியன தற்போது மௌனமாகவே இருக்கின்றன.

ஆனால் 13ஆவது திருத்தச் சட்டம் அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை. 13ஐ அமுலாக்குவதன் மூலம் தனி நாட்டுக்கு வழிகோலப்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

13 தொடர்பில் கூறும் ஏனையகதைகள் வெறுமனே ஏமாற்றுவதற்காக சொல்லப்படுபவையாக உள்ளன. நாம் அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக அணிதிரள வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் ஒரு விடயத்தினைக் கூறிக்கொள்கின்றேன். 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடாது கிராமங்களின் பக்கம் தலைவைத்தும் படுக்க வேண்டாம் என்று கூறிக் கொள்கின்றேன் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர சில்வா தெரிவித்ததாவது;

13ஆவது திருத்தச்சட்டத்தின் முதற்பகுதியின் பிரகாரம் மாகாணங்கள் இரண்டை இணைத்துக்கொள்ளமுடியும் என்பதற்கானயோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள மாகாணங்களில் வடக்கு, கிழக்கினை தவிர ஏனையவை இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு விரும்பவில்லை. ஆனால் வடக்கு கிழக்கு இணைக்கப்படுவது ஆபத்தானது. அதற்கு தமிழர்களின் சரித்திரமான பூமி என்ற அடையாளமும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதாக யாராவது கூறினால் அது தமிழர்களுக்கான தனி அலகினை வழங்குவதை ஏற்றுக்கொள்வதாகும்.

அதேநேரம் இந்த நாட்டின் ஆட்சிப்பொறுப்பில் இருந்த ஏழு ஜனாதிபதிகள் 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முயவில்லை. ஏனென்றால் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துக்களை உணர்ந்து அவர்கள் அவ்விதமான செயற்பாட்டில் களமிறங்கியிருக்கவில்லை. அவ்வாறிக்கையில் தற்போது அச்செயற்பாட்டை முன்னெடுப்பதை அனுமதிக்க முடியாது - என்றார்.

## மாகாணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அதிகாரப் பகிர்வின் அவசியத்தைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு விளக்கியதுடன் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் குறித்து அமைச்சர் கலந்துரையாடினார்.

இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் கூட அதிகாரப் பகிர்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது என்று சுட்டிக்காட்டிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்கு பயன்படுத்தப்படும் முறைகளை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முடியும் எனவும் விளக்கமளித்தனர்.

இதன்போது, இங்கிலாந்து மற்றும் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக கலாச்சாரங்கள் முற்றிலும் வேறுபட்டவை என்று அமைச்சர் டிரான் அலஸ் சுட்டிக்காட்டினார்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கேட்டறிந்தார்.

மாவட்டக் குழுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நீண்டதூரம் சென்று கொழும்பு வர வேண்டியிருப்பதாலும், சிலரது தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் உள்ளதாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பான உத்தேச விடயங்களில் புதிதாக எதுவும் சேர்க்கப்படவில்லை எனவும், ஆனால் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு மேலதிகமாக மாகாண பொலிஸ் ஆணைக் குழுவையும் நியமிக்க வேண்டிய தேவை இருக்கின்றது எனவும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

வடக்கு மாகாணம் முழுவதும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்றும், அதிகமான சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருக்கின்றனர் என்ற விடயமும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக அமைப்புகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் குழுவுக்கு இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கிடைக்கும் தகவல்களை எந்த நேரத்திலும் வழங்க முடியும் என்றும், அவ்வாறான தகவல்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்தார்.

பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் உரிய விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பான தகவல்களைப் பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் எந்த நேரத்திலும் கலந்துரையாட முடியும் என்றும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

புதன்கிழமை மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக, பொலிஸ்மா அதிபர், சி.டி.சி.டி.விக்கிரமரத்ன, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சாணக்கியன் இராசமாணிக்கம், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டு வாரங்களுக்குள் இதுகுறித்து அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்த இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறைசேரிக்குச் சுமை ஏற்படாத வகையில் சிறைச்சாலைகளைப் பராமரிக்கும் சட்டரீதியிலான கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், அது ஒருபோதும் சமூகத்தில் கருத்தாடலுக்கு உள்ளாகியுள்ள வகையில் பணம் செலுத்தி தனியான சிறைச்சாலை அறைகளைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான நடவடிக்கை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சந்தேகநபர்கள் மற்றும் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் என தற்போது 28 ஆயிரத்து 468 சிறைக்கைதிகள் இருக்கின்றனர். சிறைக்கைதிகளில் 50.3% சதவீதமானவர்கள் போதைப்பொருள் சம்பந்தமான குற்றத்துக்காகத் தண்டனை பெற்றவர்கள். அவர்களாலேயே சிறைச்சாலைகளில் தற்போது பாரிய சிக்கல் காணப்படுகின்றது.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் தண்டனை பெறும் இவ்வாறான குற்றவாளிகளுக்குத் தண்டனைகளை வழங்குவது மாத்திரம் போதைப்பொருள் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இவர்களுக்கு திறன் விருத்தி, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்தும் புனர்வாழ்வளிப்பது அவசியமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலமே அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து விடுதலையானதும் மீண்டும் அதே தவறைச் செய்வதைத் தடுக்க முடியும்.

சிறைக்கைதிகளுக்கு முறையாக உணவு வழங்கப்படுவதில்லை என்று ஒரு சிலர் குற்றஞ்சாட்டினாலும் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியிலும் சிறைக்கைதிகளுக்கு உணவு வழங்க மாத்திரம் அரசு 3.9 பில்லியன் ரூபா நிதியை செலவிட்டுவருகின்றது. 2021 - 2022 காலப் பகுதியிலும் கூட இதற்கான நிதியை அரசு ஒதுக்கி இருந்தது.

சிறைச்சாலைகளில் 13 ஆயிரம் சிறைக்கைதிகளுக்கே இடவசதி இருக்கின்ற போதிலும், தற்போது சுமார் 29 ஆயிரம் கைதிகள் இருப்பது பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அதற்காக திறைசேரியில் இருந்து பாரியளவு நிதி சிறைச்சாலைகளுக்கு வழங்கப்படுவதால் பொதுமக்களுக்கு அவசியமான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றுகின்றது.

இதனால் சிறைச்சாலைகளின் செலவைக் குறைக்கும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, பாரிய குற்றவியல் குற்றங்கள் இன்றி, சிவில் குற்றங்களுக்கு குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட முன்னர் அவர்கள் தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை குற்றம் சாட்டப்படுபவர்களில் குறிப்பிட்ட ஒரு தொகையினரை வீட்டுக்காவலில் தடுத்து வைக்கும் திட்டம் குறித்து ஆலோசித்து வருகின்றோம். சிறைக்கைதிகளை அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நேரடியாக நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தவும், ஏனையவர்களைச் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தும் நடைமுறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிறைக்கைதிகளையும் நாட்டுக்கு பயன்மிக்கவர்களாக மாற்றும் வகையில் மேலும் பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அந்தவகையில் சிறைச்சாலைக்குள்ளே உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய தொழிற்சாலைகளை நிறுவுவது குறித்து கலந்தாலோசித்து வருவதுடன் தனியார் துறையின் பங்களிப்புடன் இந்தப் பணியை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

தற்போது, இத்திட்டத்தில் முதலீடு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இத்திட்டம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள குழு அவற்றை தற்போது பரிசீலித்து வருகின்றது. சிறைச்சாலைகளின் நிர்வாக நடவடிக்கைகளுக்கும், குறிப்பாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருப்பின் மாத்திரம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத் தவுள்ளோம்.

இவ்வாறு சிறைக்கைதிகள் தொழில்முயற்சிகளில் ஈடுபட்டு பெற்றுக் கொள்ளும் வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு தொகையை, அவர்களின் பிள்ளைகளின் கல்விக்காகவும், குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளுக்காகவும், அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி கைதிகளால் வரையப்பட்ட ஓவியங்களை உள்ளடக்கிய ஓவியக் கண்காட்சியொன்று கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுசெல்வதைத் தடுக்கத் தற்போது நடைமுறையில் உள்ள வழிமுறைகளுக்கு மேலதிகமாக மேலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் கூடுதல் பரிசோதனைக்காக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பிரதான நகரங்களில், வர்த்தகப் பெறுமதிக்க இடங்களில் அமைந்துள்ள சிறைச்சாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது குறித்து கடந்த காலங்களில் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. தற்போது அதற்கான பூர்வாங்க வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் அதிகரித்து வரும் போதைப்பொருளுக்கு அடிமையாகி குற்றச் செயல்களில் ஈடுபட்டு தண்டனை பெறுபவர்களை தனியாக வைத்து மருத்துவ சிகிச்சைகளை வழங்கவும் புனர்வாழ்வளிப்பதற்குமான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.' - என்றார்.

## பயன்பாடற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையான காலப்பகுதியில் சுமார் 60 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

## கொக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியை முறைப் படி தோண்டுவதற்கான நடவடிக்கைகள் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்டுவருகின்றன.

நேற்று அந்த இடத்திற்குச் சென்ற குழுவில் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸார் ஆகியோர் அகழ்வு தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்தனர்.

இந்த அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு வாரத்திற்குத் தேவையான செலவு மதிப்பீட்டு விவரங்கள் ஏற்கனவே நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய ஆய்வைத் தொடர்ந்து தொல்லியல்த் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை ஓகஸ்ட் 17 நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஓகஸ்ட் 21 முதல் அகழ்வுப்பணியை மீண்டும் தொடங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மாணவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையூறு ஏற்படும் எனப் பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகை உள்ளிட்ட இடங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த முடியும் என்று கோட்டை நீதிவான் தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவை மீறும் போராட்டக்காரர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்றும் நீதிவான் குறிப்பிட்டார்.

இந்த நிலையிலேயே மாணவர்களின் போராட்டம் கிருலப்பனையில் இடம்பெற்றது. மாணவர்கள் அங்கிருந்து முன்னேற முற்பட்டபோது அவர்கள் மீது நீர்த்தாரைத் தாக்குதலை நடத்திய அவர்களைக் கலைத்தனர் பொலிஸார்.

## நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

மலையகப்பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று (10) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வடிவேல் சுரேஷ் எம்.பி., அசானியைப் பாராட்டிப் பேசினார்.

'1982, 1992 பற்றி மாத்திரம் தற்போது பேச முடியாது. மலையகத்தில் திறமையானவர்கள் உள்ளனர், கல்விமான்கள் உருவாகியுள்ளனர்'-என்றும் வடிவேல் சுரேஷ் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை முன்னெடுக்கப்பட்டு வரும் மலையக எழுச்சிப் பாத யாத்திரைக்கும் அவர் தனது ஆதரவை வெளிப்படுத்தினார்.

## அழித்தொழிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையான அரசியல் உறுதிப்பாடு வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்யுங்கள்.

இவ்வாறு காட்டமான ஓர் அறிக்கையை விடுத்துள்ளார் ஈபிஆர்எல்எவ் கட்சி

தொடர்ச்சி 10ம் பக்கம்...

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# புறக்கணிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் ஊக்கியே பொருளாதார நெருக்கடி

## அமைச்சர் செகான் கூறுகிறார்



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக் கடி மிகநீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டபொருளாதாரசீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான ஊக்கியாக அமைந்துள்ளதுஎனகுறிப்பிட்டுள்ளநிதி இராஜாங்க அமைச்சர் செஹான்சேமசிங்க இந்த சீர்திருத்தங்களை இலங்கையின் பொருளாதார பலவீனங்களுக்கு முடிவுகட்டும் எனவும் தெரிவித்துள்ளார். இலங்கையில் முதலீடு தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது மிகநீண்டகாலமாக பயன்படுத்தப்படாமலிருந்த இலங்கையின் மிகப்பெரிய ஆற்றலை இறுதியாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது என நாங்கள் நம்புகின்றோம் எனத் தெரிவித்துள்ள செஹான், முதலீட்டு கண்ணோட்டத்தில் இது பெரும் வாய்ப்பை வழங்குகின்றது எனவும் தெரிவித்துள்ளார். இலங்;கை துரித பொருளாதார மீட்சியை நோக்கி செல்வதற்கு தயாராகிவருவதால் இலங்கையில் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டாளர்கள் பயன் அடைவதற்கான சிறந்த தருணம் இது என குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், முதலீட்டு கண்ணோட்டத்தில் இலங்கை எவ்வளவு கவர்ச்சிகரமான நாடு என்பதை அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். (05)



# சிறந்த முடிவுகளை எடுத்தால் ஆதரவு

## சபையில் சஜித் பகிரங்கம்

ஜனாதிபதி சிறந்த முடிவுகளை எடுத்தால், எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸதெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று எந்தவொரு மாகாணசபைக்கும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இந்தநிலையில், 13 ஐ யாருக்காக நாம் நிறைவேற்றப் போகிறோம்?

தேர்தலுக்கு தற்போது நாட்டில் இடமில்லை. சர்வக் கட்சி மாநாட்டின்போது நாம் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினோம்.

மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும். 2 மாகாணங்களுக்கும் மட்டுமன்றி, 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்த முன்வர வேண்டும்.

மக்கள் ஆணை கிடைத்தவுடன், மாகாணசபைக்கான உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு, 13 தொடர்பாக கலந்துரையாட முடியும்.

134 பேரின் ஆணையுடன்தான் ஜனாதிபதி நாடாளுமன்றில் நியமிக்கப் பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு கீழ் தான் அமைச்சரவை உள்ளது. எனவே, தனக்குப் பெரும்பான்மை இல்லை என்று ஜனாதிபதி கூறமு-டியாது. எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஜனநாயகத்துக்காக நீங்கள் குரல் கொடுத்தீர்கள்.

இது ஜனாதிபதியான பின்னர் இல்லாமல் போகக் கூடாது. நீங்கள் சிறந்த முடிவுகளை எடுத்தால், எதிர்க் கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். - என அவர் மேலும்தெரிவித்துள்ளார். (05)

# ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு பொதுஜன பெரமுனவே தடை

## தயாசிறி ஜயசேகர சாடல்



ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு, அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக நாடாளுமன்றஉறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஜனாதிபதி செய்யும் முயற்சிக்கு, அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கும் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

எனவே, இந்தசெயற்பாடு ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பமா அல்லது அரசாங்கத்தின் நிலைப்பாடா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

ஜனாதிபதியின் இந்த யோசனைகள் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடுஎன்ன?இதற்கான பதிலை அந்தக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவிக்கவேண்டும்.

அதேநேரம், வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் கருத்துக்களையும் இந்த விவகாரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அப்படியானால் நாம் முழுமையானஒத்துழைப்பை வழங்கத்தயாராகஉள்ளோம். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# சிறுவர்களை வைத்து யாசகம் வாங்க தடை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ திருவிழாவில் சிறுவர்களை வைத்து சாகச நிகழ்ச்சிகளை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (05)



# கனேவல்பொலவில் சுட்டுக் கொல்லப்பட்ட யானையின் வயிற்றில் கிடந்த குட்டி யானை!

கணேவல்பொல பலுகஸ்வெள - பெல்லன்கடவல பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கர்ப்பிணி யானையின்பிரேதபரிசோதனையை அநுராதபுரம் பந்துலகம வனவிலங்கு அலுவலக கால்நடை வைத்தியர்கள் மேற்கொண்டனர்.

கணேவல்பொல வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகம் வழங்கிய தகவலையடுத்து, அநுராதபுரம் -பண்டுலகம வனவிலங்கு கால்நடை வைத்திய பிரிவைச் சேர்ந்த கால்நடை வைத்தியர்களான சந்தன ஜயசிங்க மற்றும் உதேசிகாமதுவந்திஉள்ளிட்ட குழுவினர் புதன்கிழமை மாலை அங்கு வந்து பிரேத பரிசோதனையை மேற்கொண்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட 25 வயதான இந்த யானை கர்ப்பிணி நிலையையடைந்திருந்ததாக அவர்கள் கூறினர்.

பிரேதபரிசோதனையில் 7 அரை அடி உயர முள்ள பெண் யானைக் குட்டி ஒன்று பிறக்கும் நிலையில் உயிரிழந்து அதன் வயிற்றுக்குள் காணப் பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (05)



# முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அருகில் வாகன தரிப்பிடம் அமைக்க கோரிக்கை




முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தை அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிடம் இல்லாததால் நீதிமன்றத்துக்கு வரும் பொதுமக்கள் மற்றும் பயணிகள் பெரும்சிரமங்களைஎதிர்கொள்கின்றனர் எனக் கூறி, நீதிமன்றத்தின் அருகில் வாகன தரிப்பிடமொன்றை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் ஏ31 பிரதான வீதியில் இருப்பதால் நீதிமன்றத்துக்கு முன்பாக அதிகமான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

வாகன நெரிசல் மிகுந்த இத்தகைய சூழ்நிலையில் நீதிமன்ற தேவையின் நிமித்தம் வரும் பொதுமக்கள் வாகனங்களை வீதியின் இரு மருங்கிலும் நிறுத்திவிட்டுச் செல்கின்றனர். இதனால் பயணிகளும் போக்குவரத்து மேற்கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

குறித்த பகுதியில் வாகன தரிப்பிடம் இல்லாததன் காரணமாக விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் அதிகமாகக் காணப்படுகிறது.

எனவே, நீதிமன்றத்துக்கு முன்பாகவோ அல்லது அண்மித்த பகுதிகளிலோ வாகன தரிப்பிடம் ஒன்றை அமைப்பது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்குமாறு மன்றுக்கு வரும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# வாழைச்சேனையில் சட்ட விரோத காணி அபகரிப்பில் ஈடுபட்டோர் வெளியேற பொலிஸார் கால அவகாசம்

மட்டக்களப்பு வாழைச்சேனைபொலிஸ்பிரிவிலுள்ள கொழும்பு வீதி நாவலடி தொடக்கம் ஜெயந்தியாலை பிரதேசம் வரையிலான ரயில் தண்டவாளத்துக்கும் கொழும்பு வீதிக்கும் இடையிலான 28 ஏக்கர் அரச காணிகளை சட்ட விரோதமாக அபகரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களை அங்கிருந்து வெளியேற 2 நாள் அவகாசம் வழங்கியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பிரதேசத்தில் கொழும்பு வீதிக்கும் ரயில் தண்டவாளம் அமைக் கப்பட்டிருக்கும் பகுதிக்கும் இடையிலான கொழும்பு வீதியை அண்டிய பகுதியிலுள்ள 28 ஏக்கருக்கு மேற்பட்ட அரச காணிகளை கடந்த சில வாரங்களாக சிலர் சட்டவிரோதமாக உள்நுழைந்து காட்டு மரங்களை வெட்டி கம்பி வேலிகள் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தனர்.

இந்த நிலையில் அந்த காணி அபகரிப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்களை சட்ட ரீதியாக அரசாங்கத்திடம் இருந்துகாணியைபெறுமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்த காணி அபகரிப்பு தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையையடுத்துவாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையிலான பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று காணி அபகரிப்பில் ஈடுபடுபவர்களிடம் இது அரச காணி இந்த காணியின் அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை அகற்றிக் கொண்டு உடனடியாக வெளியேறவேண்டும் இல்லாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே இவைகளை அகற்றிச் செல் வதற்கு 2 நாள் கால அவகாசம் வழங்கு-வதாக காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பேராதனை பல்கலையின் முன்னாள் பேராசிரியையின் 70 லட்சம் ரூபாய் நிதி போலி ஆவணங்கள் மூலம் மோசடி

*பேராதனை பல்கலைக்கழக கலைப்பீடத்தில்பணியாற்றியபோது உயிரிழந்த பேராசிரியை ஒருவருக்கு உரித்தான சுமார் 70 லட்சம் ரூபா பணத்தை போலி ஆவணங்களைத் தயாரித்து பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அவரது கணவருக்கு வழங்கிய சம்பவம் ஒன்று கணக்காய்வாளர் நாயகம் அம்பலப்படுத்தியுள்ளார்.*

*புதன்கிழமை கணக்காய்வாளர் நாயகம் அந்த பல்கலைக்கழக நிர்வாகத்தை கோப் குழுவின் முன் அழைத்தபோது இது தெரியவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*2020ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச்சம்பவம் போலி ஆவணங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மோசடி எனத் தெரிவித்த கணக்காய்வாளர் நாயகம், இது தொடர்பில் இது-வரையில் ஏன் சட்டம் நடைமு-றைப்படுத்தப்படவில்லை என பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் இவ்வாறான சம்பவங்களை நிறுத்துவதற்கு நிர்வாகம் உடனடியாக தலையிட வேண்டும் என கோப் குழு வலியுறுத்தியுள்ளது.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் தூண்டப்படும் இனவாதத் தீ

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றேன் என்கிற போர்வையில் சிங்கள, பௌத்த இனவாதத்திற்கு மீண்டும் தூபம்போட்டு அதனைக்கிளர்ந்தெழவைத்து, அதில் குளிர்காய்வதற்கான சூலையே அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியிருக்கிறார் போன்று தோன்றுகின்றது.**

**ஆளும் தரப்புடன் கலந்துபேசி கொள்கை முடிவுகளை எடுத்துக்கொண்டு, ஏற்கனவே சட்டத்தில் உள்ள விடயங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவதுடன் புதிதாகச் சட்டங்களை இயற்றி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டிய விடயங்களை நிதானமாக, ஆர்ப்பாட்டம் இன்றி நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து நிறைவேற்றி இந்த விவகாரத்தைக் கையாண்டிருக்க முடியும் என்றபோதும், அனைத்துக் கட்சிக் கூட்டம், நாடாளுமன்ற உரை என்று அதனைப் பெரிதாக – பூதாகாரமாக – ஆக்கி விடயத்தை தேவையற்ற வகையில் சர்ச்சைக்குள்ளாக்கியிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.**

**இது இப்போது சிங்கள, பௌத்த தீவிரவாத அமைப்புக்களால் தமிழர்களுக்கு எதிராக மீண்டும் சிங்களவர்கள் ஒன்றிணைவேண்டும் என்கிற முழக்கத்திற்கு வழி வகுத்துள்ளது. பொய், புரட்டுக்களுடன் சிங்கள மக்களை உசுப்பிவிட்டு, 13 மூலம் நாட்டைத் துண்டாட முயற்சிக்கிறார்கள் என்று அவர்களை உணர்ச்சிவசப்படுத்திவிட ஒரு குழுவினர் புறப்பட்டுள்ளனர்.**

**’13ஆவது திருத்தச் சட்டத்தினை வழங்கினால் என்ன நடக்கும்: மக்களுக்கு தெளிவூட்டல்’ எனும் தொனிப்பொருளில் கொழும்பு பௌத்த மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான ஒரு கூட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது. பௌத்த பீடங்கள், தேசிய சங்க அமைப்புக்கள், படையினர் அமைப்புக்கள், புத்திஜீவிகள் குழுவினர் ஆகியவை கூட்டிணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.**

**அங்கு பேசிய பிக்குகள் 13ஐ நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்று வாய்கூசாமல் பொய் பேசியுள்ளனர். 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்குதல் என்பது மிகவும் ஆபத்தானது. அச்செயற்பாடானது நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு வழிசமைக்கும் விடயம் என்பது மிகவும் தெளிவானது. ஆகவே அவ்விதமான செயற்பாட்டுக்கு இடமளிக்க முடியாது. அதனை எதிர்த்துப் போராடவேண்டியது அவசியமாகின்றது என்று போராசிரியர் இந்துராஹாரே தம்மரத்ன தேரர் என்பவர் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்திருக்கிறார்.**

**ஓமாரே கஸ்ஸ தேரர் என்பவர் உரையாற்றும்போது, 13ஐ அமுலாக்குவதன் மூலம் தனிநாட்டுக்கு வழிகோலப்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது, 13 தொடர்பில் கூறும் ஏனைய கதைகள் வெறுமனே ஏமாற்றுவதற்காக சொல்லப்படுபவையாக உள்ளன. நாம் அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக அணிதிரள வேண்டும்.**

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் ஒரு விடயத்தினைக் கூறிக்கொள்கின்றேன். 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடாது கிராமங்களின் பக்கம் தலைவைத்தும் படுக்கவேண்டாம் என்று கூறிக்கொள்கின்றேன் – என்றிருக்கிறார்.**

**வடக்குகிழக்கு இணைக்கப்படுவது ஆபத்தானது. அதற்கு தமிழர்களின் சரித்திரமான பூமி என்ற அடையாளமும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதாக யாராவது கூறினால் அது தமிழர்களுக்கான தனி அலகினை வழங்குவதை ஏற்றுக்கொள்வதாகும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர சில்வா என்பவர் தெரிவித்திருக்கிறார்.**

**இப்படி இல்லாது பொல்லாததுகளை எல்லாம் சொல்லி பிரச்சினையைப் பூதாகாரமாக்குவதற்கு அரசுத் தலைவர் வழியேற்படுத்திக் கொடுத்துள்ளார். இனி எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்குவதாக நடித்து, அதன் மூலம் பௌத்த சிங்கள பேரினவாத வாக்குகளை அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் தான் கவர முடியும் என்று அவர் கருதக்கூடும். ஆனால் அவரால் மூட்டப்படும் இனவாதத் தீ ஒருநாள் அவரையே கருக்கிவிடும் என்பதை அவர் உணர்வதற்கு நீண்ட காலம் செல்லாது.**

# பொலிஸ் அதிகாரம் எப்போது சாத்தியம்?

**என். சத்திய மூர்த்தி**



பொலிஸ் அதிகாரம் இல்லாத பதிமூன்றை செயல்படுத்துகிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கே சொன்னாலும் சொன்னார், தென்னிலங்கையில் அவரை எதிர்த்து அரசியல் செய்வோருக்கு புதிதாக ஒரு காரணம் கிடைத்து விட்டது. பொலிஸ் அதிகாரம் வேண்டாம் என்போரும் பதின்மூன்றே வேண்டாம் என்போரும் இரு தரப்பாக பிரிந்து நின்று சர்ச்சை செய்கின்றனர்.

இதில், தமிழர் ஆதரவு என்று தமிழர்களில் சிலர் கருதும் சஜித் பிரே மதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தலைவர்கள், ஜனாதிபதி ரணிலை மட்டும் சாடிவிட்டு, முக்கிய பிரச்சினைக்கு முகம் கொடுக்கத் தயங்குகின்றனர். பொலிஸ் அதிகாரம் மற்றும் பதிமூன்று குறித்து தாங்கள் கருத்துகூறும் அளவிற்கு கட்டாயப்படுத்தப்பட்டால் தங்களது சாயம் வெளுத்துவிடும் என்பதை அவர்கள் உணர்ந்தே இருக்கின்றனர்.

இதற்கிடையில், அயலுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி மட்டும், மாகாணங்களுக்கு பொலிஸ் அதி காரம் கொடுத்தால், அந்த அமைப்பே அரசியல்படுத்தப்படும் என்று கூறியுள் ளார். இதே கருத்தையே அவர் சர்வதேசத் தின் முன்னாலும் வைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

அமைச்சராவதற்கு முன்னர், அவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டதரணியாக செயல் பட்டவர். இப்போது அவர் முன்வைக்கும் கருத்து, கோட்டா, தமயனார் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் முன்வைத்த வாதமே.

### ஜெயலலிதாவா உதாரணம்?

இனப்போர் முடிந்து, அன்றைய ஒருமித்த தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மஹிந்த அரசு மேற்கொண்ட பேச்சுக் காலத்திலேயே, அன்றைய ராணுவ செயலராக இருந்த கோட்டபாய இவ்வாறான கருத்தை தெரிவித்திருந்



தார். மஹிந்தாவோ ஒரு படி மேலே போய், அன்றைய இந்திய நிலை மையை பிடித்துக்கொண்டு நின்றார். இன்னும் சொல்லப்போனால், அவர் கூறிய விடயம் அப்போதே பத்தாண்டு பழமையானது.

2001ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்த கையோடு, முதல்வர் ஜெயலலிதா, அரசியலில் தனது பரம வைரியான கருணாநிதியை ஊழல் குற்றச்சாட்டில், அதுவும் நள்ளிரவில் கைது செய்ய வைத்தார். அதனை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்ட, திமுகவின் மூத்த மத்திய அமைச்சர்களான முரசொலி மாறன் மற்றும் டி ஆர் பாலு ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர்.

இது பழங்கதை. ஆனால், இதனை இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்திலும் குறிப்பிட்டு பேசிய மஹிந்தா, இலங்கையிலும் இதுபோன்று மாகாண அரசுகளுக்கு பொலிஸ் அதிகாரம் கொடுத்தால், அவர்கள் ஜனாதிபதியான தன்னையேகூடக் கைது செய்ய தயங்க மாட்டார்கள் என்ற சாரப்படும்படி கருத்துத் தெரிவித்தார். ஆனால், அவர் பயந்ததாக கூறியதெல்லாம், தென்னிலங்கை மாகாண அரசுகளையே என்றும், தமிழர் மாகாணங்களை அல்ல என்றும் சுட்டிக்காட்டத் தயங்கியதில்லை.

### இந்திய உதாரணம்

இதில் கொடுமையே, அவரது விதண்டாவாதத்திற்கு ஏற்ற பதிலை, மஹிந்தாவிற்கு தமிழர் தரப்பினர் எவருமே கொடுக்கவில்லை என்பது தான். அதுவும், அந்தக் காலகட்டத்தில், சம்பந்தன் உள்ளிட்ட மூத்த தமிழ் தலைவர்கள் பலரும் தங்களது பெரும் பகுதி நேரத்தை இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டிலேயே கழித்து வந்தனர்.

விக்னேஸ்வரன், சுமந்திரன் ஆகியோர் இந்த காலகட்டத்தில் நேரடி அரசியலில் இறங்கியிருக்கவில்லை. என்றாலும், இவர்கள் அனைவருக்குமே தமிழ் நாடு அரசியல் அத்துபடி. ஆனால், தமிழ் நாட்டிலேயே தவமிருந்த தமிழ் தலைவர்கள்கூட, இந்தியாவின் அதி கார பகிர்வு முறை குறித்து கற்றறிய முயலவில்லை. சிங்கள அரசியல்வாதி கள் மற்றும் இலங்கை அரச தரப்பினர் குறித்து கேட்கவே வேண்டாம்.

மஹிந்தாவினால் அமைக்கப்பட்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமை யிலான அனைத்து கட்சி குழுவினர்கூட ஐரோப்பிய நாடுகளுக்குச் செய்தார்களே தவிர அண்டைநாடான இந்தியாவில் அதிகார பகிர்வு குறித்து படித்தறிய முயலவில் லை. அவ்வாறு அனைத்து தரப்பினரும் இந்தியாவின் முன்மாதிரியை கற்றறிந்தி ருந்தால், இந்த பிரச்சினை களே வந்திருக்காது.



இனப்பிரச்சினைக்கு தீர்வாக, பதின்மூன்றை ஒத்த ஒரு வரைவுதிட்டத்தை முன்வைத்த இந்தியா, அந்தவகையான திட்டத்தை ஆண்டு அனுபவித்திருந்தது. அதன் நெளிவு-சுளிவுகளையும் புரிந்து வைத்தி ருந்தது. பன்முகதன்மையுள்ள இந்தியாவி லேயே அந்த திட்டத்தை செயல்படுத்த முடியுமென்றால், இலங்கையில் அது இலகுவான விடயமே, என்பதே இந்தி யாவின் கணக்காக இருந்தது. தற்போதும் அந்த எண்ணமே தொட ருகிறது.

### தனி அதிகாரம், ஆனால்…

இந்திய அரசமைப்பின் படி, அனைத்து மாநிலங்களுக்கும் தனியாக பொலிஸ் அதிகாரம் இருக்கிறது. அது சட்டம்-ஒழுங்கு மற்றும் குற்றப்புலனாய்வு குறித்த அதிகாரம். இது தவிர, மத்திய அரசின் கீழும் சட்டம்-ஒழுங்கு மற்றும் நாட்டின் எல்லை பகுதி களின் பாதுகாப்பிற்காக பல்வேறு பொலிஸ் மற்றும் துணை இரா ணுவப்படை குழுக்களும் இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், இந்தியாவின் இராணுவ வீரர்களைவிட இந்த துணை இராணுவ படையினரே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களை மாநில அரசுகளின் கோரிக்கையின் படி, சட்ட-ஒழுங்கு பணிகளுக்கு துணையாக இருக்க, மத்திய அரசு அனுப்பி வைக்கலாம். அல்லது சில குறிப்பிட்ட சூழல்களில் மத்திய அரசே, அவ்வாறான படைகளை குறிப்பிட்ட மாநிலங்களில் பதற்றநிலையை தணிப்பதற்காக அனுப்பலாம். இவ்வாறு நடைபெறுவது, மிகவும் குறைவே.

இது தவிர, இந்தியாவின் மத்திய அரசின் கீழும் குற்ற புலனாய்வு துறை செயல்படுகிறது. இந்த துறை, மத் திய அரசு மற்றும் வங்கிகளில் நிகழும் ஊழல் குறித்து விசாரித்து, நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. நாட்டின் உச்ச நீதி மன்றமும் மாநிலங்க ளுக்கான உயர்நீதிமன்றங்களும் கூட இவ்வாறான விசாரணைக்கு உத்தரவிடலாம்.

இது தவிர, மாநில அரசுகள் கேட்டுக்கொண்டால் மட்டும் முக்கிய வழக்குகளை விசாரிக்கிறது. அது போன்றே, இரண்டு மாநிலம் அல்லது பிற நாடுகள் தழுவிய வழக்குகளையும் சி.பி.ஐ. என்ற இந்த அமைப்பு விசாரிக்கலாம். அவ்வாறு தான், தமிழ் நாடு அரசின் கோரிக்கையின் பேரில், இலங்கையை சேர்ந்த விடுதலை புலிகள் அமைப்பு சம்மந்தப்பட்ட ராஜிவ் காந்தி கொலைவழக்கை, சி.பி.ஐ. விசாரித்தது.

நாட்டில், எல்லை தாண்டிய பயங் கரவாதம் மற்றும் தீவிரவாத குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து, அன்றைய மன்மோகன் சிங் தலைமை யிலான அரசு, இது போன்ற குற்றங்களை விசாரிப்பதற்கு மட்டுமே, தேசிய புல னாய்வு நிறுவனத்தை ஏற்படுத்தியது. அதன் செயல்பாடுகள் இன்னமும் தொடருகின்றன.

இதில் முக்கிய விடயம் என்ன வென்றால், தேசிய புலனாய்வு நிறுனத்தை நிறுவு வதற்கு அனைத்து மாநில அரசுகளும் ஒப்புதல் வழங்கின. அவர்களும் பயங்கரவாதத் தின் தீவிரத்தை அனுபவித்தி ருந்ததால், அவற்றை தடுக்கும் விதமாக தேசிய அளவில் ஒரு நிறுவனம் சார்ந்த செயல்பாடு தேவை என்பதை உணர்ந்தி ருந்தன.

இது தவிர, இந்தியாவில், போதைப் பொருள் கடத்தல் போன்ற விடயங்களில், அன்னிய நாடுகளோ, அல் லது அன்னிய நாட்டவரோ சம்மந் தப்பட்டிருந்தால், அது குறித்து முன்னரே அறிந்து செயல்படுவதற்கென்று மத்திய அரசின் கீழ் ஓர் அமைப்பு செயல்படுகிறது. அந்த அமைப்பு, மாநில பொலிஸாரோடு ஒருங்கிணைந்து செயல்படுவர்.

இந்திய நடைமுறையின் கீழ், மாநில பொலிஸார் மத்திய பொலி ஸாருடன் மோதினார்கள் என்றெல்லாம் செய்தி வந்ததில்லை. அங்கும்தான், இலங்கையில் உள்ளது போல், இனப் பிரச்சினை, தீவிரவாதம் மற்றும் ஆயுத கிளர்ச்சி குறித்த நீண்ட சரித்திரம் இருக் கிறது. இன்னும் சொல்லப்போனால், இது போன்ற அமைப்புகளின் ஆதரவு பெற்ற மாநில அரசுகளும் பதவியில் இருந்தி ருக்கின்றன. என்றாலும், இலங்கையில் கூறப்படுவதுபோல், அபாண்டமான அல்லது அற்பத்தனமான எண்ணம் அங்கு யாருக்கும் உதிக்கவில்லை. இலங்கையிலும், பொலிஸ் அதிகாரம் செயல்படுத்தப்பட்டால், அவ்வாறான சூழ்நிலை உருவாகாது என்று நம்பலாம்.

என்றாலும், இது விடயத்தில், தமிழர் தரப்பும் நடைமுறை சாத்தி யமான வழிகளை ஆலோசித்து, அதன் முடிவுகளை ஏற்றுக்கொண்டு, தங்களது அரசியல் முன்னெடுப்புகளை செய்யவேண்டும். இனப்போர் முடிந்து பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன என்று தமிழர் தரப்பு அங்கலாய்த்தாலும், அந்த காலநேரத்தில், அவர்கள் சிங்கள மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கு எதுவும் செய்யவில்லை.

### தூபம் போட்டு…

தென்னிலங்கையில் சாதாரண கதியில், இன்னமும் பெரும்பாலோர்;, தமிழர்களை விடுதலைப்புலிகள் அமைப் பினரோடு அடையாளப்படுத்தியே பேசுகின்றனர். கருதுகின்றனர். அவர் களை பொறுத்தவரையில் தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவருமே, விடுதலை புலிகள் அமைப்பின் ஊதுகுழலே. அவ்வாறு அவர்களுக்கு தூபம் போட்டு சாமியாட வைக்க நிறைய அரசியல் தலைவர்கள் அவர்களிடையே இருக்கிறார்கள்.

அந்த வகையில், தென்னிலங்கை யில் சாதாரண மக்களுக்கு உண்மை நிலையை உணர்த்தி, அதிகார பரவல் திட்டத்தை முன்னெடுக்க தமிழ் சமூக-அரசியல் தலைமைகள் எந்த முயற்சியும் இன்றளவும் செய்யவில்லை. இனியும் காலம் கடந்துவிடவில்லை. ஆனால், அதனை செய்வார்களா, நம்மவர்கள்?

மாறாக, தென்னிலங்கை என்றாலே தலைநகர் கொழும்பு. அறிவுஜீவிகள் என்றாலே, தலைநகரில் உள்ள வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் என்று தமிழ் தலைமைகள் செயல்பட துவங்கி கனகாலம் ஆகிவிட்டது. இதன் காரணமாகவே, தென்னிலங்கையின் சாதாரண மக்கள் மட்டுமல்ல, கொழும்புநகரில் வாழும் சிங்கள-பௌத்த அறிவுஜீவிகளையும் கூட தமிழர் தரப்பு மறந்து விட்டது என்பதே உண்மை.

இனப்பிரச்சினை விடயத்தில், தென்னிலங்கை அரசியல் தலைமை கள், தங்கள் மக்களை முட்டாளாக நினைத்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். அதில் தொடர்ந்து வெற்றியும் பெற்று வருகிறார்கள். இதுவே, தமிழர் தரப்பு நிலைமையும் கூட. இரு தரப்பு அரசியல்வாதிகளும் தங்களுக்குள் மோதுவதாக பாச்சா காட்டிக்கொண்டே, தங்களது மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகிறார்கள். இது தான் பொலிஸ் அதி காரம் குறித்த விடயங்களிலும் உண்மை நிலைமை.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்விழி நயனம்

# எண்ணம் போல் வாழ்வு

'உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் : மற்றது
தள்ளிலும் தள்ளாமை தீர்த்து'

என்ற திருக்குறளை அசைபோட்டுப் பார்க்கும் போது வள்ளுவரின் சூட்சுமம் நமக்குப் புரிய வரும். ஏன் உள்ளுவது எல்லாம் உயர்வாய் இருக்க வேண்டும்? அது கிடைக்கா விட்டாலும் உயர்வாய் எண்ணுவதை விடக்கூடாது என்று அழுத்தமாகக் கூற காரணம் என்ன? சிந்தித்தோமானால் வள்ளுவர் மிகப் பெரிய மனோவியல் உண்மையை நம்மிடம் உரைக்கின்றார்.

நாம் எண்ணும் எண்ணம் என்பது நூலில்லாத பட்டத்தை போன்றது. வானத்தில் அது பறந்து கொண்டிருக்கிறது என்பதை விட, மிதந்து கொண்டிருக்கிறது என்பதே சரி. வெறும் பட்டங்களாக அல்ல படங்களாக நாம் எண்ணும் எண்ணங்கள் ஒரு நொடிக்கு ஐந்து லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் எதை நினைக்கிறோமோ அங்கு சென்ற உடனே நம்மிடம் திரும்புவதாக மனோவியலாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

வள்ளுவர் சொன்ன அந்த 'உயர்' என்ற வார்த்தையை கவனியுங்கள் உயர்வாய் நினைப்பன உன்னை உயர்த்தும் என்ற வரிகள் எவ்வளவு பெரிய உண்மையை உணர்த்துகிறது. வானத்தில் உயரே இருக்கிறது அந்த இரகசியம் நமது சகஸ்ராரத்தில் உயரே இருக்கிறது. உயர்வுள்ளல். கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர். அண்டத்தில் உள்ளதே பிண்டம். பிண்டத்தில் உள்ளதே அண்டம். அதனால் தான் சொல்கிறார்கள், ' எண்ணம் போல் வாழ்வு ' என்று.

'நாம் எதை விதைக்கிறோமோ அப்படியே அதை அறுவடை செய்கிறோம்' என்று இயற்கையின் நியதி (Cosmic Law) உரைக்கிறது. இதையே இயேசு பிரானும், ' எதை விதைத்தாயோ அதை அறுவடை செய்வாய்' என்று அழகாக கூறுவார். அதனால்தான் வள்ளுவரும் ' உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்' என்று அழுத்தமாகக் கூறுகிறார். அந்த உயர் உள்ளல் நமது சகஸ்ராரத்தின் உயரே இருக்கிறது. உயர் என்ற சொல்லே நமக்கு உயர்வைக் கொண்டு வரும்.

எண்ணங்களை மாற்றினால் வாழ்க்கை மாறிவிடும் என்பார்கள் கண்ணுக்குத் தெரியாத விண்ணுலகத்தில் எண்ணமுடியாத விடயங்கள் பல கோடி நம்மைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலத்தில் சக்திகள் அனைத்தும் இருக்கிறது. நாம் எண்ணும் எண்ணங்களை மனம் உள்வாங்கி கிரகித்து மீண்டும் அதனைச் செயல்படுத்த ஆழ்மனத்திற்கு அனுப்பி வைக்கிறது. இவை எல்லாம் நொடிப் பொழுதில் நடக்கும் இறைவனின் அறியப்படாத இரகசியங்கள். நம் எண்ணமும் கண்ணாடியும் ஒன்றுதான். கண்ணாடி நம் பிம்பத்தைப் பிரதிபலிக்கிறது. அதேபோலத்தான் நம் எண்ணமும் வாழ்க்கையும் நம் எண்ணம் நன்றாக இருக்கும் போது வாழ்க்கையும் நன்றாகவே அமைகிறது. இதை நம்பி வாழ்வோர்க்கு அந்த நம்பிக்கையே பெருந்துணையாகிறது.

'தீதும் நன்றும் பிறர்தரவாரா!' துன்பம் வரும்போதெல்லாம் பிறரையோ அல்லது தன்னையோ நொந்துகொள்வதைத் தவிர்த்து எங்கு எப்போது செய்த வினையின் பலனை இப்போது அனுபவிக்குறோம் என்பதை யோசிக்க வேண்டும். அதை சரிசெய்ய முயலவேண்டும். முடியவில்லை எனில் அதன் போக்கில் அதை விட்டுவிட்டு தன்போக்கில் செல்லவும்;. காலம் எதையும் மாற்றக்கூடியது: எந்த பிரச்சினையையும் மாற்றவல்ல சக்தி கொண்டது.

கடந்த காலத்தில் வாழ்வது எந்தவித பயனும் அளிக்கப்போவதில்லை. அது நம்மிலும் மேலும் மேலும் எதிர்மறை எண்ணங்களைத்தான் தோற்றுவிக்கும். நம் எதிர்காலமும் அது போலவே அமையும்.

ஆகவே ஒரு மகிழ்வான எதிர்காலம் அமைய நம்முடைய இன்றைய நிலை மிகவும் முக்கியமானதாக ஆகிறது. இன்று நம் மனதில் முதன்மையாக நேர்மறை எண்ணங்களுடன் ஒரு மகிழ்வான மனநிலையில் வாழ்ந்தால் அதே போன்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்குகிறோம். எண்ணிய எண்ணியாங்கு: எண்ணங்களே செயலைத் தீர்மானிக்கின்றன. எண்ணங்களுக்கு வலிமை உண்டு. அதனால் தான் எண்ணம் போல வாழ்வு என்றும், எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்பதும் இந்த வாழ்வில் வலிமை வாய்ந்த வார்த்தைகளாகவே கூறப்பட்டு வருகிறது. ஆனால் இந்த எண்ணங்களை நாம் எப்படி கையாளுகிறோம் என்பதிலேயே வாழ்வின் சூட்சுமம் அடங்கி உள்ளது. உள்ளத்தனையது உயர்வாக வேண்டுமெனில் உயர்ந்த எண்ணங்களை எண்ண வேண்டும்.


ஆடம்பரமாக வாழ்வதுதான் வாழ்க்கை என்ற வகையில் மக்களின் எண்ணங்கள் மாறி வருவதால் கொலை, கொள்ளை, வன்முறை அதிகரித்து வருகின்றன. மகாபாரதத்தில் கர்ணனின் இறப்பு தற்செயலாக நடந்தது அல்ல, மாறாக கர்ணன் ஏற்கனவே போட்ட எண்ணத்தின் விளைவுதான் அந்நிலைக்குக் காரணம் என அறியப்படுகிறது; ஆக, இந்த மண்ணுலகில் யாராக இருந்தாலும் சரி எண்ணங்களே நம் வாழ்க்கையை அமைக்கின்றன.

எண்ணத்தின் வலிமையே நம் வாழ்வின் தரம், உயர்வு எல்லாம் உலகை வெல்வதற்கு முன் தன்னை வெல்ல வேண்டும். என்று சொன்னதும் இதற்காகத்தான் தன்னை என்பது நாம் எண்ணும் எண்ணங்கனே!.



உலகின் மிகச் சிறந்த வைரம் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே.... எங்கு பார்த்தாலும் மனித மனங்களில் ஏதேதோ எண்ணங்கள் பார்க்கும் மனித முகங்கள் எல்லாம் சிந்தனைவயப்பட்டதாகவே தோன்றுகிறது. இறுக்கமான மனிதர்களாகவும்இ இயந்திர கதியான மனிதர்களாகவுமே தென்படுகின்றனர். எண்ணக் குவியல்களின் கலவைகளையும், சிந்தனை ரேகைகளையும் கொண்ட மக்கள் கூட்டத்தை காணும் திசையெல்லாம் பார்க்க முடிகிறது; சக மனிதனைக் கண்டு மகிழும் உள்ளமோ, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதலோ இல்லாமல் தனயொரு உலகில் மாறிவிட்டது. இதற்கெல்லாம் அடிப்படை யாதென்று சிந்தித்தால் அவரவர்க்கான தனிப்பட்ட எண்ணங்களே ஆகும். எண்ண ஓட்டங்கள் தவறாக இருக்கும் போது அங்கே வாழ்வியல் நெறிகளில் மாற்றம் ஏற்படுகிறது. மனித நடத்தை மாறுபாடுகளை மாற்றி அமைக்கும் வல்லமை எண்ணங்களுக்கே உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

**தெய்வேந்திரம் வஜிதா**



# நீள நினைந்து போற்றுவோம்

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்றார் வள்ளுவர். பிறப்பு போலவே உலகில் இறப்பும் எல்லா உயிர்கட்கும் இயல்பானது.

அந்த உயிர்களிடையே மனிதர்கள் உறவு - வம்சம் என்று சொந்தமும் பாசமும் பேணி வாழும் போது அவர்களிடையே ஏற்படும் பிரிவு வேதனை தருகிறது.

அவ்வாறு எங்களோடு வாழ்ந்து மறைந்த ஆன்மாக்களின் நல்ல பணிகளை நினைவு கூருவதும் அந்த ஆன்மாக்களின் நித்ய வாழ்வாகிய- முக்தியாம் சிவபதம் நோக்கிப் பிரார்த்திப்பதும் உறவுகளின்- சந்ததியாரின் கடனாகிறது.

ஆகமங்களும் கிருஹ்ய சூத்திரங்களும் சாத்திர நூல்களும் இவ்வாறு முன்னோர்களை (பிதிரர்களை) வழிபட வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறித்துரைக்கின்றன. அதற்கான முதன்மை நாட்களான அமாவாசை, மகாளய பக்ஷம் முதலியவற்றை பற்றியும் சொல்லிச் செல்கின்றன.

அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாசை நாட்களும் ஓர் ஆண்டில் புரட்டாதி மாத தேய்பிறை காலமான பதினைந்து நாட்களும் பிதிர்களுக்கு என்று முன்னோர்களை பூசிப்பதற்குரிய காலமாகப் போற்றுவோம்.

இதைவிட யுகாதி, வருாரம்பம், மாத சங்கிரமம் முதலிய வேறு பல நாட்களிலும் பிதிர் தர்ப்பணம் செய்து வழிபடும் மரபும் உண்டு. அவற்றிலும் சிறப்பான ஒரு நாளிலேனும் பிதிரர் களைசிராத்தம், தர்ப் பணம் முதலியவற்றின் மூலம் திருப்தியடையச் செய்யுமாறு நம் சாத்திர நூல்கள் அழுத்திச் சொல்கின்றன.

தேவ கார்யத்தை விட முக்கியமான இப் பிதிர்கார்யத்தில் உள்ள சிறப்பே தந்தை, தாய், தாத்தா, பாட்டி, சகோதரம், என்ற வழக்கமான திவசம் என்ற சிராத்தம் செய்தற்குரிய பிதிரர் மட்டுமன்றி அனைத்து பிதிரரையும் பூசிக்க தக்க காலமாதலாகும்.

இந்நாளில் புகழ் பெற்ற மாவிட்டபுரம் கந்தப்பெருமானின் தீர்த்தஉற்சவம்நிகழ்வதும் கவனித்தற்குரியதாகும்.



நம்முடைய நாட்டில் பல தசாப்தங்களாகத் தொடர்ந்த யுணத்தத்தாலும் கொவிட் 19 தொற்று நோய் சூழலாலும் நம் உறவுகள், நண்பர்கள் பலர் அமரத்துவமெய்தி இருக்கிறார்கள். அதன் வலி பலருக்கும் இருக்கிறது.

தந்தை வழி- தாய் வழி மட்டுமன்றி அத்தகையவர்களையும் நீள நினைந்து சிராத்தம் செய்ய தக்க காலம் இதுவாகும். அது எங்கள் எல்லோருக்கும் உளவியல் ஆற்றுப் படுத்தலாகவும் அமையும். இந்த நாளில் நம் முன்னோரை முன்னிட்டு, வேதமோதல், திருமுறை ஓதல், பிண்டம் இடல், காகத்திற்கு உணவிடல், எள்ளும் நீரும் இறைத்தல், அந்தணர்களுக்கு தானம் வழங்கல், மரங்களை நாட்டுதெல், பசுவுக்கு உணவிடல், ஏழைகளுக்கு உதவுதல் போன்ற நல்ல காரியங்களை அவரவர் இயல்புக்கேற்ப செய்து கொள்ளலாம்.



**தி. மயூரகிரிக்குருக்கள்,**
**சனாதன சேவா பீடம்**

## நல்லூர் திருவிழாவையொட்டி மாணவர் கட்டுரைப் போட்டி

நல்லூர் பெருந் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் இடையே நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பினால் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

ஒகஸ்ட் 15 காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் இடையே இந்தக் கட்டுரைப் போட்டி இடம்பெறவுள்ளதாக நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பின் இணைச் செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார்.

6,7,8 தரங்களில் கற்கும் மாணவர்களுக்கான கனிஸ்ட பிரிவில் 100 சொற்களுக்கான கட்டுரையும் 9,10,11 தரங்களில் கற்கும் மாணவர்களுக்கான மத்திய பிரிவில் 150 சொற்களுக்கான கட்டுரையும் 12,13 தரங்களில் கற்கும் மாணவர்களுக்கான உயர்தரப் பிரிவில் 200 சொற்களுக்கான கட்டுரையும் போட்டியின்போது வரையப்படுதல் வேண்டும்.

கட்டுரைகள் யாவும் மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பிடப்பட்ட பின்னர் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் ஏனைய 7 இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் யாவும் நல்லூர் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழா அன்று காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண சபை முறைமைகளை நீக்கி புதிய அரசமைப்பை உருவாக்குங்கள்

## சரத் வீரசேகர ஜனாதிபதியிடம் கோரிக்கை



பௌத்த மரபுரிமைகளுக்கு எதிர்மறையாக தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் செயற்படும் போது 13 ஆவது திருத்தம் பற்றி பேச நாங்கள் விரும்பவில்லை.

காணி அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

மாகாண சபை முறைமை வெள்ளை யானை போன்றது. புதிய அரசமைப்புக்கே மக்களாணை உண்டு, ஆகவே மாகாண சபையை நீக்கி புதியஅரசமைப்பைஉருவாக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக அதிகார பகிர்வு குறித்து ஜனாதிபதி புதன்கிழமை விசேட உரையாற்றினார்.

நான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை பார்வையிட்டுள்ளேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமை வாய்ந்த வவுனியாவில் வெடுக்குநாறி பகுதியில் உள்ள பௌத்த மரபுரிமை சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

காணி அதிகாரம் வழங்காத போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மரபுரிமைகள் இவ்வாறு அழிக்கப்படும் போது காணி அதிகாரத்தை வழங்கினால் என்ன நேரிடும் என்பது கேள்விக்கிடமாகவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான பௌத்த மரபுரிமை சின்னங்கள் காணப்படுகின்றன.

அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதுவே எங்களின் உரிமை. இவை சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் சொந்தமானது.

பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு எதிர்மறையாக செயற்படும் அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகள் இருக்கும் வரை அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி பேசுவதற்கு நாங்கள் விரும்பவில்லை.

நாடுபொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள போது தமிழ் தேசிய கூட்டமைப்பினரே அதிகார பகிர்வை கோருகிறார்கள்.

விடுதலை புலிகளின் ஆயுதமாகவே தமிழ்த்; தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது. 30 வருடகால யுத்தத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாததை தற்போது தட்டில் வைத்து வழங்க முயற்சிப்பது முறையற்றது.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க 29 ஆயிரம் பேர் உயிர் நீத்தார்கள், 14 ஆயிரத்துக்கும் அதிகமான படை வீரர்கள் தமது உடல் அங்கங்களை அர்ப்பணித்தார்கள்.

மாகாண சபைகள் செயற்பட்ட போது 10 கல்வி அமைச்சர்கள், 10 விவசாய அமைச்சர்கள் என பல அமைச்சர்கள் இருந்தார்கள். நாட்டில் தற்போது கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட சேவைகள் முன்னேற்றமடைந்துள்ளதா இல்லை, மாகாண சபை முறைமை வெள்ளை யானை போலவே உள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கே மக்களாணை உள்ளது. ஆகவே மாகாண சபை முறைமையை நீக்கி புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். - என்றார். (05)

# உளவளப் பயிற்சிநெறிகள் ஆசிரியர்களுக்குத் தேவை



சிறுவர் அபிவிருத்தி எனும் போது பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி தேவையென யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆசிரியர்களின் நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உளவள பயிற்சி மற்றும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பில் கலந்துரையாடினேன். இதனையடுத்து தனியார் நிறுவனம் ஊடாக குறித்த பயிற்சியை வழங்கத் தீர்மானித்துள்ளோம். அந்தவகையில், வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக பயற்சி வழங்கப்படவுள்ளதோடு பின்னர் கட்டம் கட்டடமாக ஏனைய பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கவும் தீர்மானித்துள்ளோம்.

எனவே இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள் ஒத்துழைக்க வேண்டும். - இவ்வாறு அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். (05)

# தனியார் கல்வி நிறுவனங்களை கட்டுப்படுத்த யாழில் நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் சேகரிக்கப்படும் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களுக்கான பொறிமுறை மற்றும் கட்டுப்பாடுகளை வகுக்கத் தீர்மானிக்கப்பட்டது.


யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)




# மத்திய அமைச்சர்களின் கையாலாகாத்தனத்துக்கு உதாரண புருஷர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## சாணக்கியன் எம்.பி. கிண்டல்



மத்திய ஆட்சியின் அமைச்சுப் பதவிகளை வைத்துக்கொண்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பதற்கு நல்லதோர் உதாரணம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. தமிழ் அமைச்சராக இருந்த போதும் மூன்றில் இரண்டு பகுதி கடல் வளம் கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்க முடியாத நிலையில் உள்ளார். இதே நிலைமையில்தான்இங்குள்ள அரச சார் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் உள்ளனர். வசதி படைத்தோருக்கு வரிச் சலுகையும் வசதி இல்லாத மக்களுக்கு வரியுமாக இந்த நாட்டு சட்ட மூலங்கள் திருத்தியமைக்கப்படுகின்றன. கொண்டுவரப்பட்ட கசினோ சட்டமூலம் மூலம் கசினோவுக்கு வரி விலக்களிக்கப்பட்டு நீருக்கான வரியை அதிகரித்துள்ளார்கள். இதனால் பாதிக்கப்படப் போவதும் வரிச்சுமையை சுமக்கப் போவது எமது மக்கள்தான்.

மகாவலி அமைச்சரிடம் எமதுபிரதேசங்களில்நிகழும் காணி அபகரிப்புக்கள் பற்றிக் குறிப்பிடும் போது அவை நாவலடியாக இருக்கட்டும் மயிலத்தமடு மாதவனை பிரதேசமாக இருக்கட்டும். அதை பார்ப்போம் தம்பி என பொறுப்பில்லாமல் பதில் சொல்கின்றார். ஒரு பொறுப்புவாய்ந்த அமைச்சர் இவ்வாறு பொறுப்பில்லாமல் பதில் கூறுகின்றமை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அதற்கான விளைவுகளுக்கும் அவரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

ஜனாதிபதி எமக்கான மாகாண சபைகளுக்கான அனைத்து அதிகாரங்களையும் தருவதாக உறுதி அளித்துவிட்டு தற்போது சொல்கின்றார் நாடாளுமன்றத்தின் மூன்றின் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் தர முடியாது என்றும் தன்னால் தீர்மானம் எடுக்க முடியாது என்றும்.

இதற்கான எதிர்பையும் நான் வெளிக்காட்டி இருந்தேன் மற்றைய சட்ட மூலங்களைத் தமிழ் மக்களுக்கு எதிரான சட்ட மூலங்களைக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற பெரும்பான்மை உண்டு. ஆனால் தமிழ் மக்களுக்கு நன்மை தரும் விடயங்களைக் கொண்டு வருவதற்கு இடமில்லை என்கின்றார்.

ஜனாதிபதியின் இந்தச் செயல்பாடு எமது மக்களை ஏமாற்றும் கண்துடைப்பு செய்யும் செயற்பாடாகும். - என்றார். (05)

# பொதுஜன பெரமுனவிற்குள் குழப்பமா? இல்லை என்கிறார் அமைச்சர் பிரசன்ன

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பொதுஜன பெரமுனவிற்குள் எந்தப் பிரச்சினையும் கிடையாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நீண்ட காலமாக உள்ளவர்.

மாகாணசபைகளின் முதல்வர்களை அமைச்சரவைக்குள் அழைத்து பேச்சு நடத்தியவர் தான் மஹிந்த ராஜபக்ஷ.

அத்தோடு, 13 பிளஸ் தருவதாக அப்போதே அவர் கூறியிருந்தார். எனவே, அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக பொதுஜன பெரமுனவிற்குள் எந்தப் பிரச்சினையும் கிடையாது. சர்வக்கட்சி மாநாட்டின்போது, நாம் இந்த நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைப்போம். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# யாழில் ஆசிரியரின் தாக்குதலுக்கு இலக்கான மாணவனின் முகத்திலுள்ள நரம்புகள் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் ஆசிரியரின் தாக்குதலுக்கு இலக்கான மாணவனின் முக நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவன் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் மாணவனுக்கு ஆசிரியர் முகத்தில் கைகளால் அறைந்துள்ளார்.

அதனால் முகத்தில் கடும் வலி ஏற்பட்ட நிலையில் மாணவனை பெற்றோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போது, மாணவனின் முகத்தில் உள்ள நரம்புகள் பாதிக்கப்பட்டமை வைத்தியர்களால் கண்டறியப்பட்டு மாணவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு வைத்தியசாலை ஊடாக அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# கிழக்கில் அரிசி ஆலைகளை அமைக்க கொரியா இணக்கம்





கிழக்கு மாகாணத்தில் அரிசிஆலைகளைஅமைப்பது தொடர்பில், கொரியா பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கொரிய அரிசி உணவுப் பொருள்கள் சங்கத்தின் பிரதிநிதிக் குழுவிற்கும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் புதன் கிழமை சௌமியபவானில் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் அரிசி ஆலைகளை அமைப்பது தொடர்பில், கொரியா பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதோடு, இது உணவு பாதுகாப்புதிட்டத்துக்குஉதவியாகவும், விவசாயிகளுக்கு சிறந்தவிற்பனைவிலையின் மூலமாக வருமானம் ஈட்டக் கூடியதாகவும் அமையும்.

மேலும் மலையகத்துக்கு, இதன் ஊடாக விநியோகத்தை ஆரம்பிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. (05)

# கொள்கலன் - ரயில் மீரிகமவில் விபத்து

மீரிகம - வில்வத்தை பகுதியில் கொள்கலனொன்று ரயிலுடன் மோதியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்து புதன்கிழமை இடம்பெ=பற்றுள்ளது. கொள்கலன் பொல்கஹவெலயில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த 'பௌஃபி கர்லயால' ரயிலுடன் மோதியுள்ளது.

இதனால் வடக்கு மற்றும் மலையக ரயில் மார்க்கங்களில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவருக்கு சான்றிதழ்கள்

அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலக முஸ்லிம் கலாசார அலுவல்கள் பிரிவு இணைந்து ரம்ழான் மாதம் அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் நடாத்திய 'ஆசிர்வதிக்கப்பட்ட ரம்ழான் மாணவர்கள்' கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக முஸ்லிம் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம்.முக்தார் ஹுசையினின் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் ராசித்யஹ்யாதலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கற்கை நெறியின் முடிவில் 49 மாணவர்கள் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் அதிதிகளாக பிரதேச செயலக பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், வலயக் கல்வி அலுவலக உதவிபணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஹ்மதுள்ளாஹ், கோட்டக் கல்விப் பணிப்பாளர்எம்.எம். உவைஸ் அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.சபீஸ், செயலாளர் எம்.பி.அப்துல் ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ.எல். தாஹிர், கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எல்.தௌபீக், ஐ.எல். றிஸ்வான், என். நவப்பிரியா, மற்றும் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.எச். ஜெய்னுதீன், முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் எம்.ஏ.எம். இப்றாலெப்பை, மத்தியஸ்த சபை உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஹமீட், பல் நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சங்கீதன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இஸ்மத், அந்நூர் நிறுவன செயற்பாட்டாளர் எம்.ஏ.எம். ஜனூஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் மேற்படி நிகழ்வை நடத்துவதற்கு அனுசரணை வழங்கிய அக்கரைப்பற்று பறகத் பவுன்டேஷன் நிறுவுநர்களானவி.ஏ.பைசால், வி.ஏ. நைசல், வர்த்தக சங்க தலைவர் ஏ.எம். அப்துஸ்ஸலாம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.முஸாதிக், பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.ஜலால்தீன், வர்த்தகர் ஜே.எம். அனஸ் உள்ளிட்ட வளவாளர்கள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் போன்ற பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சிகள்







மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்கா மற்றும் வை.எம்.எம்.ஏ. மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டிலும் டைடன் ஆசியன்கல்விநிறுவனத்தின் ஒருங்கிணைப்பிலும் புனித சென்ஜோன்ஸ் அம்பாறை மாவட்ட காரியாலயத்தில் இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவி பயிற்சி பட்டறை நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும், புனித சென்ஜோன்ஸ் படைப் பிரிவின் கல்முனை கோட்டத்தின் அத்தியட்சகருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் ஆணையர் கெப்டன் எம்.டி. நௌசாத், டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் என். கோகுளதாசன், நிறுவனத்தின் தலைவர் ஏ.ஆர்.எம்.சர்ஜீன், தலைமை நிர்வாக அதிகாரி எ.எ.எ. அப்(க)ரி, சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் சம்மாந்துறை கோட்டத்தின் அத்தியட்சகர் எம். ஆர்.ஹுசைன் என பலர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட சென்ஜோன்ஸ்படைப்பிரிவின் ஆணையர் கெப்டன். எம்.டி. நௌசாத் அவர்களால் கலந்துகொண்டு டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் இளைஞர் யுவதிகளுக்கு விரிவுரைகளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டதுடன் அன்று மாலை கலந்து கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவி சம்பந்தமான எழுத்து மூல மற்றும் செயன்முறை பரீட்சைகளும் படைப்பிரிவினால் நடத்தப்பட்டன. (05)

# சிறுவர் கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான ஒரு நாள் கல்விச்சுற்றுலா



சாய்ந்தமருது - 12 ஆம் பிரிவைச் சேர்ந்த மெகா சிறுவர் கழகத்தின் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஒரு நாள் கல்விச்சுற்றுலா இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம், அம்பாறை ஓட்டுத் தொழிற்சாலை, சீனி உற்பத்தி தொழிற்சாலை, சிறுவர் பூங்கா போன்ற பிரதேசங்களுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி உதவியாளர் யு.எல்.ஜபரின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இந்தகல்விசுற்றுலாவில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத். ஏ. மஜீத், சமுர்த்தி உதவி முகாமையாளர் எம்.எஸ்.எம். நௌஸாத், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.அன்சார் உட்பட சமூர்த்தி குழுக்களின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (05)

# தென்கிழக்குப் பல்கலைக்கு கல்வி அமைச்சால் சான்றிதழ்



கல்விஅமைச்சால்கடந்தபுதன்கிழமைஅன்றுபண்டாரநாயக்க ஞாபகார்த்த வரவேற்பு மண்டபத்தில் நடத்தப்பட்ட பரிசளிப்பு நிகழ்வில் வைத்து கல்வி அமைச்சால் செறிவூட்டல் கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு மற்றும் ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்துதல் அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்காக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீடத்திற்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த சான்றிதழை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் கலை,கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் உட்பட கல்விசார் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தரிப்பிடம் வந்தது நல்லூர் சப்பரம்







நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பரத்தின் பீடம் நேற்றுக் காலை இடம்பெற்ற விசேடபூஜைவழிபாடுகளின் பின்னர் தரிப்பிடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆலயத்தின் கிழக்குப் புறமிருந்து காலை 10 மணியளவில் பக்தர்களினால் இழுக்கப்பட்டு ஆலயத்தின் சப்பர தரிப்பிடத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது.

## அழித்தொழிக்க...

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

யின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

முன்னாள் சட்ட அமைச்சரும், அயலுறவுத்துறை அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் 13ஆவது திருத்தம் அரசமைப்பின் ஓர் அங்கம் என்றும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு நாடாளுமன்றத்தை நாடவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஒகஸ்ட் 7 அன்று செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவித்துள்ளார். அவரது கூற்றுக்கு பதில் அளித்து சுரேஷ் க.பிரேமச்சந்திரன்விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கானதீர்வென்பது இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே பிரச்சினைக்குரிய ஒரு விடயமாக மாற்றப்பட்டிருக்கிறது. சிங்களம் மாத்திரம் அரச கருமமொழி,வாகனங்களில்சிங்கள ஸ்ரீ, பல்கலைக்கழகங்களில் தரப்படுத்தல்என்றுதொடங்கிய சிங்கள இனவாதமானது வளர்ச்சியடைந்து தமிழ் மக்களின் காணிகளைப் பறித்தெடுத்தல் அவர்களை விரட்டியடித்தல்அங்குசிங்கள மக்களைக்குடியேற்றல்என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்து, இன்றும் புராதான இடங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளைசூறையாடுகின்ற வேலையாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இதற்கு எதிரான தமிழ் மக்களின் அறவழிப் போராட்டம் அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மக்களும்தங்களைப்பாதுகாத்துக்கொள்வதற்காக ஆயுதம் ஏந்த வேண்டியேற்பட்டது. மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த இந்தப் போரில், பல்லாயிரக்கணக்கானதமிழ் மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டனர், ஆயிரக்கணக்கான படையினரும் கொல்லப்பட்டனர். நாட்டின் பொருளாதாரம் மிக மோசமானவீழ்ச்சியைச்சந்தித்தது. வாங்கிய கடன்களைக் கட்டமுடியாத அளவிற்கு இலங்கை பொருளாதார நெருக்கடியை இன்று சந்தித்திருப்பதுடன், இலங்கையின்நாணயமும்வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

இத்தகைய மோசமான நிலையிலும்கூட, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான ஒரு மதிப்புமிக்க தீர்வை எட்டுவதற்கு சிங்களத் தரப்புத் தயாராக இல்லை என்பதையே அவர்களது நடவடிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் சிங்களத் தரப்புகள் இடையில் ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டபோதும் அதனைச் சிங்கள தரப்பு ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்ததும், ஆயுதப் போராட்டம்நடந்த காலத்தில் பல்வேறுபட்ட பேச்சுக்கள் நடத்தப்பட்டபோதும் பல்வேறுபட்ட தீர்வுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதும் அவற்றில் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாமல் அனைத்தும் குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டதாகவே இருக்கின்றது.

சிங்கள பௌத்த மேலாதிக்க ஆட்சிகளினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சமஷ்டிக்காக நீண்டகாலம் அறவழி போராட்டம்நடத்தி இயலாத பட்சத்தில் தனிநாடுகோரிப் போராடினார்கள். அதுவும் அடக்கி ஒடுக்கப்பட்டதன் காரணமாக மீண்டும் சமஷ்டிகோரிக்கை முன்னெழுந்தது. அதுவும் ஒரு நீண்டகால இழுபறியாக இருப்பதன் காரணத்தால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடு உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமைகளை முழுமையாக அமுல்படுத்தும்படி தமிழ் மக்கள் கோரி வருகின்றனர். இந்தியாவும் அதனையே இலங்கை ஆட்சியாளர்களிடம் வலியுறுத்துகின்றது.

ஆனால், பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில்கூட விருப்பமின்றி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஓர் அரசியல் சாசன திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்திற்குப் போகவேண்டும் என்று கூறுவதும் அங்கு பேசவேண்டும் இங்கு பேசவேண்டும் என்று கூறுவதும் அர்த்தமற்றதும் காலத்தை விரயமாக்கும் ஒரு செயற்பாடுமாகும்.

முன்னாள் சட்ட அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் 13ஆவது திருத்தம் என்பது அரசமைப்பில் ஓர் அங்கம் என்றும் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும் நாடாளுமன்றம் போகவேண்டிய அவசியமில்லை என்றும் கூறியிருப்பதுடன், இவ்வாறு நடந்துகொள்ள முயற்சிப்பது உள்நோக்கம் கொண்டது என்றும் கூறியிருக்கின்றார். எதிர்க்கட்சியில் இருக்கும் பொழுது ஏதோ தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருப்பதுபோல் பேசுவதும் ஆளும் தரப்பிற்குப் போனவுடன் அவற்றை மறந்து செயற்படுவதும் முழு சிங்களத்தலைமைகளின்பழக்கதோசமாக இருக் கின்றது.

ஜனாதிபதி பிரேமதாச, மங்களமுனசிங்க தலைமையில் ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்கினார். ஆனால் அதனை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்தார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக அவர்கள் ஒரு தீர்வுப் பொதியை உருவாக்கி அதனை நலிவடையச் செய்து, அதனை நாடாளுமன்றத்தில்சமர்ப்பித்தார். அங்கு ரணில் விக்கிரமசிங்க அந்த வரைபை தீயிட்டுக் கொளுத்த, சந்திரிகா பண்டாரநாயக்க அதனைக் கிடப்பில் போட்டுவிட்டார். பின்னர் மகிந்த ராஜபக்ச திஸ்ஸவிதாரணதலைமையில் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவை உருவாக்கினார். அது கொடுத்த பரிந்துரைகளை அவரும்குப்பைக்கூடைக்குள் வீசிவிட்டார். பின்னர் மகிந்த ராஜபக்ச அவர்கள் தமிழ்த் தரப்புடன் பதினேழு சுற்றுப் பேச்சுநடத்தினார். அவையும் காலத்தை விரயம் செய்யும் நோக்கத்தைக் கொண்டதாக இருந்ததே தவிர, அங்கும் எதுவும் நடைபெறவில்லை. பின்னர் ரணில்-மைத்திரி கூட்டு ஆட்சியில் ஒரு புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.அதுவும் கிடப்பில் போடப்பட்டது.

இறுதியாக இந்தியாவின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையை அமுல்படுத்துவதற்கான ஜே.ஆர். ஜெயவர்த்தனவால்உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்தத் தயாராக இல்லாதசூழ்நிலையைஇன்று நாம் அவதானிக்கின்றோம். பிரதமர்கள், ஜனாதிபதிகள், ஆளும்தரப்புக்கு ஆதரவான நாடாளுமன்றஉறுப்பினர்கள் தமிழ்மக்களின்வாக்குகளின் மீது குறிவைத்தார்களே தவிர, அவர்களுக்கான உரிமைகளைவழங்குவதில் அவர்களுக்கு எத்தகைய ஆர்வமோ விருப்பமோ இருக்கவில்லை. மாறாக, இன்றும்கூட, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வடக்கு-கிழ்கில் நிலைநிறுத்துவதற்கான தொடர்ச்சியான பல்வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களை நடத்தி வருவதையே நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிக்கும் உங்கள் நோக்கங்கள் அனைத்தையும் நாங்கள் இறுதிவரை எதிர்ப்போம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்-என்றுள்ளது.

## இந்தியாவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'எமது மக்கள் மத்தியில் நிலவும்நவீன அடிமைத்துவ நிலைமைக்குஇலங்கையை மாறி, மாறிஆண்ட இனவாத அரசுகள், இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவை பொறுப்பேற்க வேண்டும். இங்குநிலவும்பெருந்தோட்ட "துரைமார்-அடிமைத்தனம்" ஒழிய வேண்டும். இனியும் பொறுக்கமுடியாது. எங்களை "இரத்த தேநீர்" என "சிலோன் டீ''க்கு எதிராக பிரசாரம் செய்யும் நிலைக்குத் தள்ள வேண்டாம் என எச்சரிக்கின்றேன். இந்த நவீன அடிமைத்தனம் இனி முடிவுக்கு வர வேண்டும். இதற்காக மலையகத் தமிழ் மக்கள் இன்று வேண்டுவது எவரதும் அனுதாபங்கள் அல்ல. எமக்குத் தேவை நியாயம்.

இன்றைய இந்திய அரசு இதை உணர்ந்துள்ளது. ஆகவே எமது மக்களின் நல்வாழ்வுக்காக, முதற்கட்டமாக 300 கோடி இலங்கை ரூபாய்களை பிரதமர் நரேந்திர மோடி நன்கொடையாக ஒதுக்கித் தந்துள்ளார். பிரதமர்மோடிக்கு நன்றி. இந்தியாவுக்கு நன்றி. இனிஇந்தியாவைப்பின்பற்றி பிரிட்டிஷ் அரசும் ஸ்டேர்லிங் பவுன்ட்ஸ்களை எமக்காக ஒதுக்கித் தர வேண்டும் என இலங்கைநாடாளுமன்றத்தில் இருந்தபடி, மலையக மக்களின் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைவன் என்றமுறையில்நான்கோருகின்றேன். இந்தக் கோரிக்கையை இலங்கையில் உள்ள ஐக்கிய இராச்சிய தூதுவர் லிசா வன்ஸ்டல் இலண்டனில் உள்ள தனது அரசுக்குக்கொண்டுசெல்வார் என நம்புகின்றேன்.

முன்னைய மற்றும் சமீபத்தைய கணக்கீடுகள் மற்றும் அறிக்கைகளில் இலங்கை மத்திய வங்கி, உலக வங்கி, ஐநா உலக உணவுத் திட்டம், ஐ.நா. உணவுவிவசாயநிறுவனம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,நவீனஅடிமைத்தனம் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் டோமா யோஒபகாஆகியோர்,பெருந்தோட்ட வதிவாளர்களை ஒதுக்கப்பட்ட, நலிந்த, உரிமையற்ற சமூகமாக அடையாளம்கண்டுள்ளனர்.

மேலும் இன்றைய பொருளாதார நெருக்கடி இந்தப்பிரிவினரை, வறுமை, உணவுபாதுகாப்பிமின்மை, போசாக்கின்மை ஆகிய துறைகளில் மேலும் மோசமான மட்டங்களுக்கு தள்ளியுள்ளது.

மலையகத் தமிழ் இலங்கையர்சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்டப் பிரிவினர், இலங்கையில், 1823இல் முதல் இன்று வரை 200 வருடங்களை நிறைவு செய்துள்ளனர். பெருந்தோட்ட மக்களின் வாழ்வு, ஏறக்குறைய ஒரே மாதிரியாக மாறாமல், முதலாம்125 வருட பிரிட்டிஷ் ஆட்சி, இரண்டாம் 24 வருட பிரித்தானிய முடியாட்சி கீழான சுதந்திர இலங்கை ஆட்சி, மூன்றாம் 51 வருட இலங்கை குடியரசு ஆட்சி, ஆகிய மூன்று யுகங்களிலும் இருக்கின்றது.

இப்போதுதெரிகின்றஒரே மாற்றம், வெள்ளை பிரிட்டிஷ் ராஜ்யத்தில் இருந்து, மாநிற பெருந்தோட்டஇராஜ்யத்துக்கு மாறியதுதான். இதுஇலங்கை ஜனநாயகசோசலிசகுடியரசில் நிலவும்வெட்கங்கெட்டநவீன அடிமைத்துவம்.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் மிகவும் நலிவடைந்த பிரிவினராக மானிடவளர்ச்சியின்அனைத்துப் புள்ளி விபரங்களிலும் நாட்டின் ஏனைய மக்களை விட மிகவும் பின்தங்கியுள்ளனர்.

இலங்கை பெருந்தோட்டங்களில் நிலவும் நவீன அடிமைத்துவம் இந்த மக்களை, மனிதாபிமானமற்ற தாழ்நிலை வாழ்நிலைமைகள், அரைகுறைசுகாதார பாதுகாப்பு, போஷாக்கின்மை, மோசமான சிசு, கர்பிணி மரணம், வறுமை, பெண்களின் மீதான அதி மோசமான சுமை, சிறுவர் தொழில், மோசமான பணி நிலைமைகள், குறைந்த சம்பளத்துடன் அதிக நேர வேலை, பாலியல்தொந்தரவு, உடல்ரீதியான மற்றும் வாய்மொழி தாக்குதல் ஆகியவற்றடன் கூடிய வீட்டு வேலை, சுரண்டல் மற்றும் பாரபட்சம், பெருநிறுவன தோட்டங்களில், அரச தோட்டங்களில், தனியார்சிறு தோட்டங்களில் நியாயமற்ற தினக்கூலி முறைமை, தோட்ட நிர்வாகங்களின் ஒடுக்குமுறைக்கு துணை போகும் பொலிஸ் அதிகாரிகள், சமமற்ற கல்வி வாய்ப்புகள், தரமற்ற கல்வி, பாடசாலைகளிருந்து மாணவர் இடை விலகல், சட்ட நீதியை பெரும் வாய்ப்பின்மை, மொழி உரிமையின்மை, வாழ்வதற்கும், வாழ்வாதாரத்துக்கும்நாட்டின்ஏனைய மக்களுக்குகிடைக்கும்காணி உரிமை பெருந்தோட்ட மக்களுக்கு மறுக்கப்படுவது ஆகிய கொடுமைகளுடன் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது.

மலையகத்தமிழ்இலங்கையர்சமூகத்துக்குள்வரும் பெருந்தோட்டப்பிரிவினரின் சமூக பொருளாதார அந்தஸ்துகளை உயர்த்த, பௌத்த போதனைகள், விசேட ஒதுக்கீட்டு கொள்கைகள் அடிப்படையில், இன மற்றும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் கரங்கோர்க்குமாறு, இம்மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்றமுறையில், அரசையும், சகோதர மக்கள் பிரதிநிதிகளையும்நாம்கோருகின்றோம்.

அனுதாபங்களையல்ல, நியாயத்தையே நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கப்படும் இலங்கையின் முழுமையான பிரஜைகளாவதையே நாம் எதிர்பார்க்கிறோம்.

பெருந்தோட்ட குடியிருப்புகள், இலங்கை தேசிய பொது நிர்வாக கட்டமைப்புகளுக்குள் கொண்டு வரப்பட்டு, போதுமான கிராம சேவையாளர் பிரிவுகளும், பிரதேச செயலக பிரிவுகளும், உருவாக் கப்பட்டு, நாட்டின் ஏனைய கிராமிய பிரதேச மக்களுக்கு இணையாக, பன்முகப்படுத்தபட்ட அரச சேவைகள் மற்றும் நலன் புரி சேவைக்களை பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பெருந்தோட்ட நிர்வாகங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து விடுபட்டு, முழுமையான பிரஜைகள் என்ற அந்தஸ்து கிராமிய, பிரதேச செயலக, மாவட்ட மட்டங்களில் உருவாக வேண்டும் என நாம் கோருகின்றோம்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நடப்பில் உள்ள ஜனத்தொகை விகிதாசாரத்தை போன்று பெருந்தோட்ட பிரதேசங்களிலும் புதிய பிரதேச சபைகளை நிர்ணயம் செய்து உருவாக்கப்பட வேண்டும் எனவும் நாம் கோருகின்றோம்.'-என்றார்.

# அமைதியான இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கு இலங்கையோடு இணையும் இந்தோனேசியா

### அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையுடன் இணைந்து அமைதியான, நிலையான மற்றும் வளமான இந்து-பசுபிக் பிராந்தியத்தை உருவாக்குவதே ஆசியான் அமைப்பின் எதிர்பார்ப்பாகும் என்ற இந்தோனேசிய தூதுவர் டிவி குஸ்டினா டோபிங் தெரிவித்தார்

கொழும்பில் உள்ள இந்தோனேசிய தூதரகத்தில் இடம்பெற்ற 56ஆவது "ஆசியான்" தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்தோனேசிய தூதுவர் டிவி குஸ்டினா டோபிங் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

670 மில்லியனுக்கும் அதிகமான மக்களுடன், உலக சனத்தொகையில் சுமார் 8.8%, ஆசியான்அமைப்புஎன்பது, உலகளவில் மூன்றாவது பாரிய சந்தையாகும்.

ஆசியான் அமைப்பு, இலங்கையை ஒரு முக்கியமான பிராந்திய பங்காளியாகப் பார்க்கிறது. இலங்கையில் ஆசியான் தூதுக்குழு பல்வேறு தரப்பினருடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மேலும், ஆசியான் அமைப்பு, இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைஏற்படுத்தவும், மக்களிடையேயான உறவுகளைமேம்படுத்தவும்தயாராகஉள்ளது.

அமைதியான, நிலையான மற்றும் வளமான இந்து-பசுபிக் பிராந்தியத்தை உருவாக்குவதே ஆசியான் அமைப்பின் எதிர்பார்ப்பாகும். இந்து-பசுபிக் பிராந்தியத்தில் தொடர்புகளை வலுப்படுத்த விரும்பும் நாடுகளுக்கு ஆசியான் எப்போதும் திறந்திருக்கும் என்று கூற வேண்டும்.

ஆசியான் அமைப்பின் அபிவிருத்தியின் பிரதிபலன்களை இலங்கைக்குவழங்குவதற்கு இலங்கையுடன்தொடர்ந்துபணியாற்றுவோம் என்றும், ஆற்றல்மிக்க மற்றும் பன்முகப் பங்காளித்துவத்தின் அவசியத்தை உணர்ந்துள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். பொருளாதாரம், பாதுகாப்பு, சுகாதாரம், சூழல் மற்றும் சமூக-கலாசார, காலநிலை மாற்றம் உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கு, விதிகள் அடிப்படையிலான சர்வதேச செயல்முறையை வலுப்படுத்துவது உட்பட பகிரப்பட்ட மதிப்புகள், கொள்கைகள் மற்றும் ஆர்வங்கள், உலகெங்கிலும் உள்ள நாடுகளுடன் உறவுகளை நிர்வகிப்பதற்கான அடிப்படையை உருவாக்குகின்றது.

அந்த அடிப்படையின்கீழ், இலங்கையுடன் கட்டியெழுப்பப்பட்ட கூட்டிணைவுபலவருடங்கள் மற்றும் பல தசாப்தங்களுக்கு தொடர்ந்து வளர்ச்சியடையும் என்று நாம் அனைவரும் உண்மையாக எதிர்பார்த்துள்ளோம்.

ஆசியானின் 57ஆண்டுகளில், பொதுவான சவால்களை கூட்டாக எதிர்கொள்ளவும், அனைவருக்கும் அதிக வாய்ப்புகளைக் கொண்டு வருவதற்கு, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்போம் என்ற உறுதிமொழியை புதுப்பிப்போம் - என்றார்.

# கல்முனை மாநகர நிதி மோசடி கைதான இருவருக்கும் மறியல்

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான இருவருக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த மோசடி வழக்கு புதன்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஆஜர்படுத்தப்பட்ட இரு சந்தேக நபர்களையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் தற்போதுவிசாரணைகளைபொறுப்பேற்றுள்ள குற்றப் புலனாய்வு பிரிவினர் ஒகஸ்ட் 7 அன்று சாய்ந்தமருது பகுதியில் வைத்து கல்முனை மாநகரசபையில்கடந்தகாலங்களில் தற்காலிக சிற்றுழியர்களாகக் கடமையாற்றிய இரு சந்தேகநபர்களைக் கைது செய்திருந்தனர்.

கைதான இருவரும் கடந்த காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் வீடுகளில் வரி அறவீடு செய்தவர்கள். இவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் வரிப்பணத்தை மோசடி செய்துள்ளனர் என்றசந்தேகத்தில்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள்முக்கியவாக்குமூலங்களை வழங்கியுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் குறித்த வரிமோசடியுடன் தொடர்புடைய பல நபர்கள் கைது செய்யப்பட உள்ளனர் என்றும் பெலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த ஊழியர்களின் சேவைக்காலத்தில் வரியிறுப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின் போது மேலும் மோசடி, முறைகேடுகள் எவையும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பிலும் இவற்றுடன் வேறு எவராவது சம்பந்தப்பட்டிருக்கின்றனரா என்பது குறித்தும் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும்கடந்தகாலங்களில்இவ்வரிமோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் இந்த விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சிஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிமித்தம் நிர்வாகமட்டத்தில் சுயாதீன விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அத்துடன் குறித்த நிதி கையாடல் சம்பவம் தொடர்பில் கடந்த காலங்களில் கல்முனை பொலிஸ் நிலையம் அம்பாறை விஷேட குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம்இந்தவழக்குவிசாரணைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2023இல் வெளியிடப்பெற்றது.